Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, ஏப்ரல் 26, 2025 | இதழ் 13

# டாக்டர் கி. கஸ்தூரிரங்கன் மறைவுக்குப் பிரதமர் இரங்கல்

சென்னை, 26 ஏப்ரல் 2025: இந்தியாவின் அறிவியல் மற்றும் கல்வித்துறையில் தலைசிறந்த ஆளுமையாகத் திகழ்ந்த டாக்டர் கி. கஸ்தூரிரங்கன் மறைவிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இஸ்ரோவில் பணியாற்றிய அவர், விடாமுயற்சியுடன் இந்திய விண்வெளித் திட்டத்தை புதிய உச்சத்திற்கு கொண்டு சென்றதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். "தேசியக் கல்விக் கொள்கையை உருவாக்கும் பணியில் டாக்டர் கஸ்தூரிரங்கன் மேற்கொண்ட முயற்சிகளுக்கும், நாட்டில் கற்றல் முறை முழுமையானதாகவும், தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற வகையிலும் இருப்பதை உறுதி செய்ததற்காக இந்தியா என்றென்றும் அவருக்கு நன்றியுடையதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். பல இளம் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்களுக்கு அவர் தலைசிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்" என்று பிரதமர் திரு மோடி மேலும் கூறினார்.

சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில்:

"இந்தியாவின் அறிவியல் மற்றும் கல்விப் பயணத்தில் மிகவும் போற்றத் தக்கவராகத் திகழ்ந்த டாக்டர் கி. கஸ்தூரிரங்கனின் மறைவுக்கு மிகவும் வருத்தமடைகிறேன். தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய அவரது தலைமைப் பண்பு மற்றும் தேசத் திற்கான தன்னலமற்ற சேவை மக்களால் என்றென்றும் நினைவில் கொள்ளப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரோவில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிய அவர், இந்தியாவின் விண்வெளித் திட்டத்தை விடா முயற்சியுடன் புதிய உச்சத்திற்கு கொண்டு சென்றார் என்றும் பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது நாட்டிற்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைக்க வழிவகுத்ததாக அவர் கூறினார். அவரது சீரிய தலைமைப்பண்பு நாட்டின் லட்சியமான செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தப் படுவதை செயலாக்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

"தேசிய கல்விக் கொள்கையை உருவாக்குவதில் டாக்டர் கஸ்தூரிரங்கன் மேற்கொண்ட முயற்சிகளுக்கும், இந்தியாவில் கற்றல் முறையை முழுமையானதாகவும், தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளதற்காக நாடு என்றென்றும் அவருக்கு நன்றியுடன் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். பல இளம் விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாகவும் டாக்டர் கி. கஸ்தூரிரங்கன் திகழ்ந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனது எண்ணங்கள் அவரது குடும்பத்தினர், மாணவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் எண்ணற்ற அபிமானிகளுடன் உள்ளன. ஓம் சாந்தி."

# நான்காம் தலைமுறை ஆழ்கடல் ரோந்துக் கப்பல் யார்டு (3040) கீல் பதிக்கும் நிகழ்வு

சென்னை, 26 ஏப்ரல் 2025: நான்காவது தலைமுறை ரோந்து கப்பல் யார்டு 3040 -க்கான கீல் பதிக்கும் (கப்பல் அடிப்பகுதி இணைப்புக் கட்டை பொருத்தல்) விழா நேற்று (ஏப்ரல் 24-ம் தேதி) கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டுமான நிறுவனத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக போர்க்கப்பல் உற்பத்தி மற்றும் கொள்முதல் கட்டுப்பாட்டாளர் வைஸ் அட்மிரல் ராஜாராம் சுவாமிநாதன் கலந்து கொண்டார். இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் கமாண்டர் பி.ஆர்.ஹரி (ஓய்வு), இந்தியக் கடற்படை மற்றும் கப்பல் கட்டும் தளத்தின் பிற மூத்த அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு அடுத்த தலைமுறை கடல் ரோந்து கப்பல் கட்டுமானத்தில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிப்பதாக உள்ளது. இது இந்தியாவின் உள்நாட்டு கப்பல் கட்டும் திறன்களை வெளிப்படுத்துவதாக உள்ளது.

கோவாவில் உள்ள கோவா கப்பல் கட்டுமான நிறுவனம் மற்றும் கொல்கத்தாவின் கார்டன் ரீச் கப்பல் கட்டுமானம் மற்றும் பொறியியல் நிறுவனத்துடன் இணைந்து பதினொரு அடுத்த தலைமுறை கடல் ரோந்து கப்பல்களை உள்நாட்டிலேயே வடிவமைத்து நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்கள் கடந்த 2023-ம் ஆண்டு மார்ச் 30-ம் தேதி கையெழுத்தாகின.

கடலோர பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு, தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், கடல் சொத்துக்களைப் பாதுகாத்தல், கடற்கொள்ளை எதிர்ப்பு பணிகளுக்காக ஏறத்தாழ 3000 டன் எடையுடன் கூடிய இந்த ரோந்துக் கப்பலின் கீல் பதிக்கும் நிகழ்வு அதன் திட்டமிடப்பட்ட காலத்திற்குள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

'தற்சார்பு இந்தியா' மற்றும் 'இந்தியாவில் உற்பத்தி செய்வோம்' என்ற இயக்கங்களின் தொலைநோக்குப்பார்வைக்கு ஏற்ப பதினொரு ரோந்துக் கப்பல்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அவை இந்திய கடற்படையின் கடல்சார் வலிமையை அதிகரிக்க உதவும்.

# 2025 பிப்ரவரி மாதத்தில் இஎஸ்ஐ திட்டத்தின் கீழ் 15.43 லட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்

சென்னை, 26 ஏப்ரல் 2025: 2025 பிப்ரவரி மாதத்தில் 15.43 லட்சம் புதிய ஊழியர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக இஎஸ்ஐசியின் தற்காலிக சம்பளப் பட்டியல் தரவு வெளிப்படுத்துகிறது.

2025 பிப்ரவரி மாதத்தில் 23,526 புதிய நிறுவனங்கள் தொழிலாளர் அரசு காப்பீட்டுத் திட்டத்தின் சமூகப் பாதுகாப்பு வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் மூலம் அதிகமான தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப் பட்டுள்ளது.

பிப்ரவரி 2025 மாதத்தில் இத் திட்டத்தின் கீழ், சந்தா செலுத்திய மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 2,97,04,614 ஆகும்.

இது முந்தைய ஆண்டின் இதே மாதத்தின் 2,91,38,395 எண்ணிக்கையைவிட 5,66,219 உறுப்பினர்கள் தற்போது கூடுதலாக இடம்பெற்றுள்ளனர்.

இம்மாதத்தில் சேர்க்கப்பட்ட மொத்த 15.43 லட்சம் ஊழியர்களில், 7.36 லட்சம் ஊழியர்கள், அதாவது மொத்த பதிவுகளில் சுமார் 47.7% பேர் 25 வயதுக்குட் பட்டவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

மேலும், சம்பளப் பட்டியல் தரவுகளின் பாலின வாரியான பகுப்பாய்வு, 2025 பிப்ரவரியில் பெண் உறுப்பினர்களின் நிகர சேர்க்கை 3.35 லட்சமாக இருப்பதைக் குறிக்கிறது. இது தவிர, 2025 பிப்ரவரி மாதத்தில் மொத்தம் 74 திருநங்கை ஊழியர்கள் இஎஸ்ஐ திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர், இது சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் அதன் பலன்களை வழங்குவதற்கான காப்பீட்டு கழகத்தின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

தரவு உருவாக்கம் ஒரு தொடர்ச்சியான நடவடிக்கை என்பதால், கொடுக்கப்பட்டுள்ள சம்பளப் பட்டியல் தரவுகள் தற்காலிகமானவையாகும்.

# வேளாண் துறையில் சான்றுகள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கம் தேவை: ஐ.சி.ஏ.ஆர் தலைமை இயக்குநர்

சென்னை, 26 ஏப்ரல் 2025: தேசிய வேளாண் அறிவியல் அகாடமி (நாஸ்) மற்றும் வேளாண் அறிவியல் முன்னேற்றத்திற்கான அறக்கட்டளை ஆகியன (டாஸ்) இணைந்து இரண்டு புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானிகளான பகுதி வறண்ட வெப்ப மண்டலத் திற்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனம் தலைமை இயக்குநர் டாக்டர் ஹிமான்ஷு பதக் மற்றும் வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறை (டேர்) மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கான கவுன்சில் தலைமை இயக்குநர் டாக்டர் எம்.எல். ஜாட் ஆகியோரைக் கௌரவிக்கும் பாராட்டு விழாவை நடத்தின.

வேளாண் அறிவியல், ஆராய்ச்சி மற்றும் கொள்கை மேம்பாடு ஆகியவற்றில் கூட்டு முயற்சிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட டாஸ் மற்றும் நாஸ் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது இந்த நிகழ்ச்சியின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்ச்சியின் போது, டாக்டர் எம்.எல்.ஜாட், பிரதமர் நரேந்திர மோடியின் அமிர்த காலம் குறித்த தொலைநோக்கு பார்வையை அடைய வேளாண் சகோதரத்துவம் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

வேளாண் துறையில் அறிவியல் மற்றும் சான்றுகள் அடிப்படையிலான கொள்கை வகுப்பதன் அவசரத் தேவையை வலியுறுத்திய அவர், விவசாயிகளுக்கு நிலையான வாழ்வாதாரங்களை உருவாக்குவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

விவசாயிகளின் முகத்தில் புன்னகையை வரவழைக்கவும், நமது இலக்குகளை நாட்டின் இலக்குகளுடன் இணைக்கவும் பொதுவான கூட்டு இயக்கத்திற்கான நேரம் இது என்று அவர் மேலும் கூறினார்.

சமூக மாற்றத்தில் அறிவியலின் முக்கிய பங்கு குறித்து டாக்டர் ஹிமான்ஷு பதக் உரையாற்றினார். ஒவ்வொரு சமூகமும் அறிவியல் சிந்தனையை ஏற்றுக்கொண்டு ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், சர்வதேச வேளாண் ஆராய்ச்சிக்கான ஆலோசனைக் குழு (சிஜிஐஏஆர்) மற்றும் நாஸ் இடையேயான கூட்டு முயற்சிகளின் கடந்த கால வெற்றிகளையும் சுட்டிக்காட்டினார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில், மத்திய தொழில்நுட்ப ஆராய்ச்சி கவுன்சில், சிறப்பு புதுமைப் படைப்புக் குழு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்ச்சியான கூட்டாண்மை, இந்தியாவில் வேளாண் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை மேலும் வலுப்படுத்தும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த விழாவில் டாக்டர் பி.கே.ஜோஷி உள்ளிட்ட முன்னணி வேளாண் வல்லுநர்கள் மற்றும் பிரமுகர்களின் உரைகளும் இடம்பெற்றன.




# மகளிர் உரிமைத் தொகை கிடைக்காதவர்கள் ஜூனில் விண்ணப்பிக்கலாம்: ஸ்டாலின்

சென்னை, 26 ஏப்ரல் 2025: மகளிர் உரிமைத் தொகை கிடைக்காதவர்கள் ஜூன் மாதம் தமிழகம் முழுவதும் நடைபெற இருக்கும் 9 ஆயிரம் முகாம்களில் விண்ணப்பிக்கலாம் என்று சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தொடர்பாக உறுப்பினர் ரா.ஈஸ்வரன் கோரிக்கைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறுக்கிட்டு பதில் அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

உறுப்பினர் ஈஸ்வரன், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய அந்தத் திட்டத்தின்கீழ், ஒரு கோடியே 14 லட்சம் பேர்களுக்கு அது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தகுதிவாய்ந்த எல்லோருக்கும் அது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனால், இன்னும் இதிலே விடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, இந்த அவையிலும் அது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு, மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தின்கீழ் பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை ஏற்று, அவற்றை உடனடியாக நிறைவேற்றுகிற




பணிகளை நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்தப் பணியைப் பொறுத்த வரையில், வருகிற ஜூன் மாதம், 4 ம் கட்டமாக மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ் கோரிக்கைகளைக் கேட்கக் கூடிய பணிகளை நாங்கள் தொடங்க விருக்கிறோம்.

அந்தப் பணி 9 ஆயிரம் இடங்களில் நடை பெறவிருக்கிறது. அப்படி நடைபெறுகிறபோது, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை யாருக்கெல்லாம் விடுபட்டிருக்கிறதோ, அவர்கள் முறையாக விண்ணப்பித்தால் நிச்சயமாக விரைவில் அவர்களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறினார்.

# எஸ்ஆர்எம்ஐஎஸ்டி - ல் சிறப்பான தொடக்கத்துடன் ஆரம்பமான ரேயுச்சி 2025 சர்வதேச கருத்தரங்கு



காட்டான்குளத்தூர் 26, ஏப்ரல் 2025: மின்சாரம், மின்னணுவியல், எங்கும் நிறைந்த தகவல் தொடர்பு மற்றும் கணக்கீட்டு நுண்ணறிவு ஆகியவற்றில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள் குறித்த 4வது சர்வதேச மாநாடு (ரேயுச்சி-2025), எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உயர் கல்வி நிறுவனத்தில் (எஸ்ஆர்எம்ஐஎஸ்டி) மிகுந்த ஆர்வத்துடனும் அறிவார்ந்த ஊக்கத்துடனும் தொடங்கியது. மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டு, ஐஇஇஇ - ஆல் தொழில்நுட்ப ரீதியான ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், உலகம் முழுவதிலுமிருந்து கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட, ஆர்வமும், துடிப்பும் மிக்க கலவையாக பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தொடக்கவிழா நிகழ்வில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய தொகுப்பாளர்கள் பங்சுகா மற்றும் சஹானா ஆகியோர் வரவேற்புரை வழங்கினர்.

புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் பல்வேறு துறைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இக்கருத்தரங்கின் முக்கிய பங்கை வரவேற்புரையில் வலியுறுத்தி, நாளின் நிகழ்ச்சிகளுக்கு ஊக்கமளிக்கும் பாதையை அமைத்தனர்.

அதைத் தொடர்ந்து, எஸ்ஆர்எம்ஐஎஸ்டி - ன் துணைவேந்தர் பேராசிரியர் சி. முத்தமிழ்செல்வன், வெவ்வேறு துறைகளில் ஆற்றிய சிற்பன பங்களிப்புகளுக்காக சிறப்பு விருந்தினர்களைப் பாராட்டி கௌரவித்தார்.

ரேயுச்சி 2025 குறித்த ஒரு நுண்ணறிவுமிக்க கண்ணோட்டத்தை டாக்டர் தாமோதர் பாணிகிரஹி வழங்கினார்.

இக்கருத் தரங்கின் நோக்கங்கள், கருப்பொருள் எல்லை மற்றும் உலகளாவிய ஆராய்ச்சி பரிமாற்றத்திற்கான ஒரு செயலூக்கியாக இருக்க வேண்டும் என்ற அதன் தொலைநோக்கு பார்வை குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

துணைவேந்தர் பேராசிரியர் சி. முத்தமிழ்செல்வன் அவர்களால் வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ கருத்தரங்கு ஆய்வறிக்கை, நிகழ்வின் ஒரு முக்கியமான தருணமாக அமைந்தது.

அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் அறிவார்ந்த பங்களிப்புகள் மீது எஸ்ஆர்எம்ஐஎஸ்டி-ன் அர்ப்பணிப்பை இந்த ஆய்வறிக்கையின் வெளியீடு பிரதிபலித்தது.

தலைமை உரையாற்றிய பல்கலையின் துணைவேந்தர், புதுமையான கண்டுபிடிப்புகள், தொழில்முனைவு மற்றும் உலகளாவிய கல்வி அமைப்புகளுடன் ஈடுபாடு ஆகியவற்றில் இக்கல்வி நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்தினார்.

மாணவர்களின் மீது முழு கவனம் செலுத்தும் தொலைநோக்கு திட்டமும் மற்றும் சிறப்பான தலைமைத்துவ பண்பும் அடுத்த தலைமுறை பொறியாளர்களையும் தொழில்நுட்ப வல்லுநர்களையும் சிறந்த திறனதிகாரம் பெற்றவர்களாக தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

# பாண்டி பஜார் பகுதியில் உள்ள ஆண்கள் தங்கும் விடுதியில் 2 லேப்டாப்கள் மற்றும் சார்ஜரை திருடிய நபர் கைது. 2 லேப்டாப்கள் மற்றும் 1 சார்ஜர் மீட்பு



சென்னை 26, ஏப்ரல் 2025: மயிலாடுதுறை. சீர்காழியைச் சேர்ந்த ராஜகுமாரன், வ/32, த/பெ.கலியமூர்த்தி என்பவர் சென்னை, தி.நகரிலுள்ள ஒரு கல்வி நிறுவனத்தில் படித்துக் கொண்டு, தி.நகர், இராமகாமத்துபுரம், சாரதி தெருவிலுள்ள ஆண்கள் தங்கும் விடுதியில் தங்கி வருகிறார். இவர் 04.04.2025 அன்று மாலை அவர் படித்து வரும் கல்வி நிறுவனத்துக்கு சென்றுவிட்டு சில மணி நேரம் கழித்து வந்து பார்த்தபோது, அவர் தனது அறையில் வைத்திருந்த அவரது லேப்டாப், சார்ஜர் மற்றும் அவரது நண்பரின் ேப்டாப் என 2 லேப்டாப்கள் மற்றும் 1 சார்ஜர் திருடு போயிருந்தது தெரியவந்தது.

இது குறித்து ராஜகுமாரன் ஆர்-4 சௌந்தரபாண்டியனார் அங்காடி காவல் நிலைய குற்றப்பிரிவில புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆர்-4 சௌந்தர பாண்டியனார் அங்காடி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தினருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை தீவிரமாக ஆய்வு செய்து, மேற்படி லேப்டாப்களை திருடிய எதிரி ராஜதுரை, வ/24, த/பெ.பாபு, முதல் தெரு, நேரு நகர், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து மேற்படி விடுதியிலிருந்து திருடிய 2 லேப்டாப்கள் மற்றும் 1 சார்ஜர் மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி ராஜதுரை மேற்படி விடுதியில் தங்குவதற்கு அறைகளை பார்ப்பது போல வந்து லேப்டாப்களை திருடிச் சென்றது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி ராஜதுரை விசாரணைக்குப் பின்னர் 24.04.2025 அன்ற நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# ராயபுரம் செயற்குழு உறுப்பினர் பிறந்தநாளில் நலத்திட்ட உதவிகள்!



சென்னை 26, ஏப்ரல் 2025: தமிழக வெற்றி கழகத்தின் வட சென்னை ராயபுரம் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.சுரேஷ் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வட சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் கட்பீஸ் கே. விஜயராகவன் மற்றும் மாவட்ட கழக இணை செயலாளர் கே.ஜெகன் அவர்கள் 200 ஏழைகளுக்கு அன்னதானமும் 100 பெண்களுக்கு புடவையும் வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் எம்.சுரேஷ் அவர்கள் நிருபர்களிடம் கூறுகையில்: எங்கள் தளபதி விஜய் அவர்கள் சொல்லும் வழியில் மட்டும் செல்லுவோம். 2026 ல் எங்கள் தளபதி ஆட்சியை பிடிக்கும் போது அந்த வெற்றியை கொண்டாட காத்துக் கொண்டிருக்கிறோம். என்று கூறினார். நிகழ்ச்சியில் கழக தோழர்களும், கிளை நிர்வாகிகளும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# “திரை உலகின் தேவசேனா தேவயானி”; நிழற்குடை பட விழாவில் வனிதா விஜயகுமார் புகழாரம்



சென்னை 26, ஏப்ரல் 2025: தர்ஷன் பிலிம்ஸ் சார்பில் ஜோதி சிவா தயாரிப்பில் உருவாகியுள்ள திரைப் படம். ‘நிழற்குடை’. சிவா ஆறுமுகம் கதை திரைக்கதை எழுதி இயக்குகிறார், இவர் இயக்குநர் கே.எஸ் அதியமானிடம் உதவியாளராக பணியாற்றியவர்..

தேவயானி முதன்மை கதாபாத் திரத்தில் நடிக்கும் இந்த படத்தில் விஜித் கதாநாயகனாகவும் கண்மணி கதாநாயகியாகவும் மற்றும் முக்கிய வேடங்களில் இளவரசு, ராஜ்கபூர் மனோஜ் குமார் வடிவுக்கரசி, நீலிமா இசை, நிஹாரிகா, அஹானா என இரு குழந்தைகள் நடித்துள்ளனர் மேலும் தர்ஷன் சிவா என்ற புதுமுகம் மிரட்டலான கதாபாத்திரத்தில் அறிமுகமாகிறார்.

தமிழ்நாடு மற்றும் புதுவையின் திரையரங்க வெளியீட்டு உரிமையை பிளாக்பஸ்டர் புரடெக்ஷன் நிறுவனம் பெற்றுள்ளது. உலகமெங்கும் வரும் மே மாதம் 9ம் தேதி நிழற்குடை வெளியாகிறது..

இதனையடுத்து ‘நிழற்குடை’ படத்தின் இசை மட்டும் ட்ரைலர் வெளியீட்டு விழா நேற்று இரவு சென்னை சாலிகிராமம் பிரசாத் லேபில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இயக்குநர் கே.பாக்யராஜ், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், இயக்குநர் பேரரசு, தயாரிப்பாளர் டி.சிவா, பெப்சி தலைவர் இயக்குனர் ஆர்.கே செல்வமணி, நடிகை வனிதா விஜயகுமார், நமீதா, தயாரிப்பாளர் மதியழகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இயக்குநர் சிவா ஆறுமுகம் பேசும்போது,

“இந்த படத்தில் இன்றைக்கு தேவையான கருத்தை ஆறிலிருந்து அறுபது வயது வரை உள்ளவர்களுக்கு பிடிக்கும் விதமாக நான் அழுத்தமாக சொல்லியிருக் கிறேன். இந்த படத்திற்கு நானே தான் தயாரிப்பாளர். இந்த காலகட்டத்தில் ஒரு சின்ன படத்தை தயாரிப்பதற்கு எவ்வளவு போராட்டங்கள் என்பது அனைவருக்கும் தெரியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த படத்தில் நடித்த நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தான் எனக்கு மிகப்பெரிய ஒத்துழைப்பு தந்து ஆதரவாக இருந்தனர்” என்று கூறினார்.

நாயகன் விஜித் பேசும்போது,

“கடந்த வருடம் நான் நடித்த ஒயிட் ரோஸ் என்கிற படம் வெளியானது. அதை தொடர்ந்து எனக்கு கே/எஸ் அதிகமான் அலுவலகத்தில் இருந்து அழைப்பு வந்தது/ கதை சொல்ல வேண்டாம் என்று கூறினாலும் கூட, அரை மணி நேரம் சொன்னார்கள். கதை பிடித்து இருந்தது. எப்போது சார் தேதிகள் வேண்டும் என கேட்டபோது கொஞ்சம் வெயிட் பண்ணுங்கள் சொல்கிறோம் என்று சொன்னதும் எனக்கு இந்த படத்தில் நாம் நடிக்கிறோமா, எதற்காக நம்மை அழைத்தார்கள், என்ன கதாபாத்திரம் பண்ண போகிறோம் என சிறிய குழப்பமும் சந்தேகமும் வந்தது. ஆனால் ஒரு வாரம் கழித்து மீண்டும் எனக்கு அழைப்பு வந்தபோது இந்த படத்தில் நான் நடிப்பதை உறுதி செய்தார்கள். அது மட்டுமல்ல என்னுடைய மகளுக்கும் இந்த படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தை கொடுத்தார்கள். தேவயானி இந்த படத்தில் நடிக்கிறார்கள் என்று சொன்னதும் கொஞ்சம் எனக்கு படபடப்பாகத்தான் இருந்தது. ஆனால் முதல் நாள் படப்பிடிப்பிலிருந்து அவர் என்னை எளிதாக உணர வைத்து விட்டார், இந்தப் படத்தில் நான் நடித்தது எல்லாமே பல சீனியர் நடிகர்களுடன் தான்” என்று கூறினார்.

நாயகி கண்மணி பேசும்போது,

“இந்த படத்தில் நடிப்பதற்கு முன்னதாக சின்னத்திரையில் தான் நடித்து வந்தேன். அதேசமயம் இந்த படத்தில் நடிக்க வந்தபோது எப்படி ஒரு பெரிய நடிகையை நடத்துவார்களோ அதேபோல முறையாக, நல்ல விதமாக நடத்தினார்கள். என்னுடைய முதல் மேடை இது. சின்னத்திரைக்கு வந்த இந்த நான்கு வருடங்களில் எனக்கு நீங்கள் கொடுத்து வந்த அதே அன்பையும் ஆதரவையும் வெள்ளித்திரையிலும் கொடுப்பீர்கள் என நம்புகிறேன். படம் சிறிய படமாக இருந்தாலும் நாங்கள் அனைவருமே இதற்கு மிகப்பெரிய கடின உழைப்பை கொடுத்திருக்கிறோம். ஒரு நல்ல ஃபீல் குட் படமாக இது இருக்கும்” என்று கூறினார்.

நடிகை தேவயானி பேசும்போது,

“என்னுடைய குடும்ப விழா இது. இந்த மேடையில் 30 வருடங்களுக்கு முன்பு என்னை அறிமுகம் செய்த இயக்குநர் கே.எஸ் அதியமானுருக்கு நான் நன்றி சொல்ல விரும்புகிறேன். எனக்கு திரை உலகில் திருப்புமுனை கொடுத்த படம் காதல் கோட்டை என்றாலும் திரையுலகில் என்னை முறையாக அறிமுகம் செய்து இந்த தமிழ்நாட்டிற்குள் அழைத்து வந்ததே இயக்குநர் கே.எஸ் அதியமான் தான். அவருக்கு எங்கேயுமே நான் நன்றியை வெளிப்படையாக சொன்னது இல்லை. இதுதான் அவருக்கு நன்றி சொல்லும் முதல் மேடை. 30 வருடங்களுக்குப் பிறகு இதுவரை மாறாமல் இருக்கும் அவரது குழுவுடன் மீண்டும் இணைந்து பணியாற்றி இருக்கிறேன். அது எவ்வளவு பெரிய ஒரு ஆசீர்வாதம். அது எனக்கு கிடைத் திருக்கிறது. மறுபடியும் இதுபோன்ற ஒரு அற்புதமான படத்தில் எனக்கு வாய்ப்பு கொடுத்து இருக்கிறார்கள். சின்ன படம், பெரிய படம் என்பதைவிட நல்ல படம் என்று சொல்லலாம். இது ஒரு அழகான கருத்துள்ள, இன்றைக்கு இருக்கக் கூடிய, பெற்றோர்களுக்கு தேவையான ஒரு படம். இந்தப் படத்தை வெளியிடும் பிளாக் பஸ்டர் வினியோகஸ் நிறுவனத்திற்கு நன்றி. இந்த படத்திற்கு நிறைய தியேட்டர்களை கொடுத்து கொஞ்சம் பொறுமையாக காத்திருந்து படம் பிக்கப் ஆகும் வரை படத்தை நீக்காமல் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முன்பு எல்லாம் படம் வெளியாகி ஒரு வாரம் கழித்து கூட பிக்கப் ஆகி ஓடி இருக்கிறது” என்று கூறினார்.

ஒரு குழந்தைக்கு முதல் ஆசிரியை அதன் தாய் தான். இந்த படம் தாய்மையை பற்றி சொல்கிறது. நீங்கள் எவ்வளவு உயர்த்திற்கு சென்றாலும் உங்களைப் பார்த்து பொறாமைப் படாத ஒரே உயிர் உங்களுடைய தாய் தான். இந்தத் தாய்மை கதாபாத்திரத்தை தாங்கி நிற்கின்ற தகுதி நம் தேவயானிக்கு இருக்கிறது.

நிழற்குடை படத்திலிருந்து திரையரங்கின் தொடக்க காட்சிக்கு மக்களை அழைத்து வருவதற்கு அவரே போதும்” என்று கூறினார்.

தொழில் நுட்ப கலைஞர்கள் விவரம்

தயாரிப்பு ; தர்ஷன் பிலிம்ஸ் ஜோதிசிவா, கதை திரைக்கதை இயக்கம் ; சிவா ஆறுமுகம், வசனம் ; ஹிமேஷ்பாலா, இசை ; நரேன் பாலகுமார், ஒளிப்பதிவு ;ஆர் பி குருதேவ், கலை இயக்கம் ; விஜய் ஆனந்த், படத் தொகுப்பு ;ரோலக்ஸ், மக்கள் தொடர்பு ;ஏ ஜான்/ தேன்மொழி

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# கின்லே சோடா ரூ. 1,500 கோடியை எட்டியது - கோகோ கோலா இந்தியாவுக்கு ஒரு ஸ்பார்க்ளிங் வெற்றி

சென்னை 26, ஏப்ரல் 2025: கோகோ கோலாவின் முன்னணி பிராண்டான கின்லே சோடா, நிலைத் தன்மை, தரம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை ஆகியவற்றால் உந்தப்பட்டு ரூ. 1,500 கோடி வருவாய் இலக்கைத் தாண்டியுள்ளது. கூர்மையான, தேவை சார்ந்த போர்ட்ஃபோலியோவில் கட்டமைக்கப்பட்ட இந்த மைல்கல், பரந்த அளவிலான பானங்களை நுகர்வோருக்கு அணுகக்கூடியதாக மாற்றும் நிறுவனத்தின் உத்தியை எடுத்துக் காட்டுகிறது.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக, கின்லே பாரத்துடன் இணைந்து வளர்ந்து, அன்றாட மற்றும் கொண்டாட்ட தருணங்களில் ஒரு பகுதியாக மாறியுள்ளது. தெருவோர தேலாக்களில் கிடைக்கும் நிம்பு சோடாக்கள் முதல் பிரீமியம் விருந்தோம்பல் மிக்சர்கள் வரை, இந்த பிராண்ட் நம்பகமான, உயர்தர சோடாவாக நற்பெயரைக் கொண்டுள்ளது.

அதன் மிருதுவான சுவை மற்றும் தனித்துவமான கார்பனேற்றம் ஆகியவை பல்வேறு சந்தர்ப்பங்கள், விற்பனை நிலையங்கள் மற்றும் தலைமுறைகளில் இதை ஒரு பிரதான உணவாக மாற்றியுள்ளன.

இன்று, 200 மில்லி முதல் 2.25 லிட்டர் பெட் வரையிலான வடிவங்களில் கிடைக்கும் கின்லே சோடா, உங்கள் உள்ளூர் கிரானா கடைகள் முதல் ஸ்விக்கி மற்றும் ஜெப்டோ போன்ற விரைவான வர்த்தகம் மற்றம் பிரீமியம் அங்காடிகள் வரை இந்தியாவில் 1.4 மில்லியனுக்கும் அதிகமான சில்லறை விற்பனை நிலையங்களில் கிடைக்கிறது.




சோடா பிரிவில் கின்லே தொடர்ந்து முன்னிலை வகிக்கும் நிலையில், கோகோ கோலா இந்தியா, கின்லே ஸ்ட்ராங் சோடாவிற்கான புதுப்பிக்கப்பட்ட மற்றும் புதிய பிராண்ட் அடையாளத்துடன் அதன் இருப்பை விரிவுபடுத்துகிறது, இது தரம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கைக்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

கோகோ கோலா இந்தியா மற்றும் தென்மேற்கு ஆசியாவின் வளரும் சந்தைகளின் பிரான்சைஸ் செயல்பாடுகளின் துணைத் தலைவர் வினர் நாயர் அவர்கள், "கின்லே சோடாவின் வெற்றி நம்பிக்கை, நிலைத்தன்மை மற்றும் தரம் ஆகியவற்றில் வேரூன்றியுள்ளது. மிகைப்படுத்தலில் அல்ல, செயல்படுத்தலில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம், மேலும் அந்த ஒழுக்கம் எங்கள் போர்ட்ஃபோலியோவை வேறுபடுத்துகிறது. ஆழமாகக் கேட்பதன் மூலமும், உள்நோக்கத்துடன் புதுமைகளை உருவாக்குவதன் மூலமும், ஒவ்வொரு சேனலிலும் பிராண்டை விரிவுபடுத்தியுள்ளோம். இந்த மைல்கல் கின்லேயை ஒவ்வொரு நாளும் தேர்ந்தெடுக்கும் மக்களைக் கொண்டாடுகிறது மற்றும் நோக்கமுள்ள, தேவைக்கு ஏற்ற பிராண்டுகளை உருவாக்குவதற்கான எங்கள் உத்தியை பிரதிபலிக்கிறது. அதே நுகர்வோர்-முதலில் மனநிலையுடன் நாங்கள் தொடர்ந்து வளர்வோம், ஏனெனில் அதுதான் உண்மையான அளவை இயக்குகிறது."


தரவு சார்ந்த முடிவுகள், விநியோகச் சங்கிலி வலிமை மற்றும் நுகர்வோர் புத்துணர்ச்சியில் என்ன தேடுகிறார்கள் என்பதில் கூர்மையான கவனம் செலுத்துதல் ஆகியவற்றால் ஆதரிக்கப்படும் நோக்கமுள்ள புதுமைகளுடன் சந்தையை வழிநடத்துவதற்கான கோகோ கோலா இந்தியாவின் உறுதிப்பாட்டை கின்லே சோடாவின் வெற்றிக் கதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

# தொடர் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் போக்கிரி பதிவேடு குற்றவாளிகள் மீது சென்னை சரக எல்லையிலிருந்து வெளியேறிட உத்தரவு. சென்னை பெருநகர காவல்துறை நடவடிக்கை.

சென்னை 26, ஏப்ரல் 2025: சென்னை பெருநகர காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஆதாய கொலை பழிவாங்கும் கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களில் ஈடுபடக்கூடிய போக்கிரிகளை கண்டறிந்து அவர்கள் மேல் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் அவர்களால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.







இதன் தொடர்ச்சியாக சென்னை மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சென்னை பெருநகர காவல் எல்லைக்குள் நுழைந்து பொதுமக்களின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய போக்கிரிகளை கண்டறிந்து அவர்கள் மீண்டும் இதுபோன்ற கொடுஞ்செயல்களில் சென்னை பெருநகர காவல் எல்லைக்குள் ஈடுபடுவதை தடுக்கும் பொருட்டு சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்களின் உத்தரவின்பேரில், மாவட்ட காவல் துணை ஆணையர்களால் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் அச்சுறுத்தல் தரக்கூடிய மற்றும் தங்களுக்கு எதிரான வழக்குகளில் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய சாட்சிகளை மிரட்டக்கூடிய வரலாற்று பதிவேடு உடைய போக்கிரிகளாக கண்டறியப்பட்டு பரிந்துரை செய்யப்பட்ட 1. பி. லெனின், 2. கு.நெடுங்குன்றம் சூர்யா மற்றும் 3. ஜெ.ராஜா (எ) ராக்கெட் ராஜா ஆகிய போக்கிரிகள் மீது நேற்று (25.04.2025) சென்னை நகர காவல் சட்டம் பிரிவு 51 ஏ-ன் படி வெளியேற்றுதல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மூன்று போக்கிரிகளில் 1. பி. லெனின் என்பவர் 6 கொலை வழக்குகளிலும், 12 கொலை முயற்சி வழக்குகள் உட்பட 28 குற்ற வழக்குகளிலும் சம்பந்தப்பட்டுள்ளார்.

2. கு.நெடுங்குன்றம் சூர்யா என்பவர் 5 கொலை வழக்குகளிலும், 12 கொலை முயற்சி வழக்குகள் உட்பட 64 குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளார்.

3. ஜெ.ராஜா (எ) ராக்கெட் ராஜா என்பவர் 5 கொலை வழக்குகள், 6 கொலை முயற்சி வழக்குகள் உட்பட 20 குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளார்.

இதன் மூலமாக மேற்படி போக்கிரிகள் சென்னை பெருநகர காவல் நிலைய எல்லைக்குள் நீதிமன்ற வழக்கு தொடர்பாகவோ அல்லது காவல் துறையினர் விசாரணை தொடர்பாகவோ இல்லாமல் வேறு எந்த ஒரு காரணத்திற்காகவும் நுழைவது இன்றிலிருந்து அடுத்த ஒரு ஆண்டு காலத்திற்கு முற்றிலுமாக தடை செய்யப் பட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறும் பட்சத்தில் மேற்படி போக்கிரிகள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# வடபழனி பகுதியில் சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த பார் ஊழியர் கைது. 13 பீர்பாட்டில்கள் பறிமுதல்.

சென்னை 26, ஏப்ரல் 2025: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர காவல் எல்லைக் குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்து வரும் நபர்களை தனிப்படை காவல் குழுவினர் கண்காணித்து கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, ஆர்-8 வடபழனி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் நேற்று (24.04.2025) காலை, வடபழனி, கங்கையம்மன் கோயில் தெருவில் உள்ள ஒரு டாஸ்மாக் பார் அருகே கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த மணி (எ) கிருஷ்ணகாந்த், வ/27, த/பெ.முத்துசிவம், திருவமுத்துர் மெயின் ரோடு, சிவகங்கை மாவட்டம் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 650 மி.லி. அளவு கொண்ட 13 பீர்பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி மணி (எ) கிருஷ்ணகாந்த் என்பவர் மேற்படி டாஸ்மாக் பாரில் வேலை செய்து வருவது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி மணி (எ) கிருஷ்ணகாந்த் விசாரணைக்குப் பின்னர் 24.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு (ஏஎன்ஐயு) காவல் குழுவினரின் தொடர் நடவடிக்கையால் சென்னையில் கடந்த 8 மாதங்களில் போதைப்பொருள் கடத்தி வருதல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டது தொடர்பாக 108 செயற்கை போதைபொருள் வழக்குகள் உட்பட 1,044 போதை பொருள் வழக்குகள் பதிவு. 22 வெளி நாட்டவர், 80 வெளி மாநிலத்தவர் உட்பட 2,774 நபர்கள் கைது.

சென்னை 26, ஏப்ரல் 2025: "சென்னை பெருநகரத்தில் போதைப்பொருள் விற்பனையை தடுக்கும் நோக்கில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்களால், நுண்ணறிவுப் பிரிவு காவல் இணை ஆணையாளர் மற்றும் துணை ஆணையாளர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு (ஆன்டி-நர்கோடிக்ஸ் இன்டலிஜென்ஸ் யூனிட் - ஏஎன்ஐயு) தனிப்படை 05.08.2024 அன்று உருவாக்கப் பட்டது. இப்பிரிவில் ஒரு உதவி ஆணையாளர், 2 காவல் ஆய்வாளர்கள், 5 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 30 காவல் ஆளிநர்கள் பணியாற்றுகின்றனர்.

சென்னை பெருநகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கஞ்சா ஈற்றும் செயற்கை போதைப்பொருட்கள் சின்தடிக் டிரக்ஸ்) தொடர்பான தகவல்களை சேகரித்து தகவலாளிகளை உருவாக்கி, போதைப் பொருள் குற்றவாளிகள் மற்றும் செயற்கை போதைப்பொருள் வலையமைப்பை (நெட்வொர்க்) கண்டறிந்து இவ்வலையமைப்பின் முன் மற்றும் பின் தொடர்புகளை விசாரித்து போதைப் பொருள் குற்றவாளிகளை 360கு கோணத்தில் கண்காணித்து காவல் நிலைய பொறுப்பு அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு தொடங்கியதன் விளைவாக கடந்த 8 மாதங்களில் சென்னை பெருநகர எல்லைக் குட்பட்ட காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட 1,044 போதைப்பொருள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குறிப்பாக 25 கமர்ஷியல் குவான்டிடி வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

இதில், 824 கஞ்சா வழக்குகளில் 1215.53 கிலோ கிராம் கஞ்சா, 112 மாத்திரை வழக்குகளில் 51,229 மாத்திரைகள் (டைடால் & நிட்ராவெட்) கைப்பற்றப் பட்டுள்ளது. இதில் 108 செயற்கை போதைப் பொருள் வழக்குகள் உள்ளடக்கம் ஆகும். மேற்படி வழக்குகளில் மொத்தம் 2,774 நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

108 செயற்கை போதைப்பொருள் வழக்குகளில் 464 நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். மேலும், சென்னை பெருநகர காவல்துறையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் மொத்தம் 71 செயற்கை போதைப் பொருள் வலையமைப்புகள் (நெட்வொர்க்) அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் 548 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு, அதில் 431 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதில் குறிப்பாக பெங்களூர், மும்பை, டெல்லி ஆகிய மாநிலங்களில் பதுங்கி இருந்து சென்னையில் போதை பொருட்கள்

விற்பனை செய்து வந்த 20 நைஜீரியர்கள், 1 கேமரூன், 1 சூடான் என மொத்தம் 22 வெளிநாட்டவர்களும், வெளி மாநிலங்களான அசாம், கர்நாடகா, ஒரிசா, திரிபுரா, மும்பை மற்றும் மணிப்பூரைச் சேர்ந்த 8 பெண்கள் உட்பட 80 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவின் (ஏஎன்ஐயு) தொடர் முயற்சி மற்றும் தீவிர கண்காணிப்பின் காரணமாக வி-1 மாதவரம் காவல் நிலைய குற்ற எண் 1176/2024 என்ற வழக்கில் 12 எதிரிகள் கைது செய்யப்பட்டு, 17 கிலோ மெத்தம் பெட்டமைன் என்னும் போதைப்பொருளை பறிமுதல் செய்து அதன் தொடர்ச்சியாக அருப்புக் கோட்டையில் இயங்கி வந்த மெத்த பெட்டமைன் தயார் செய்யும் ஆய்வகம் கண்டறிந்து அழிக்கப்பட்டது.

பி-6 கொடுங்கையூர் காவல் நிலைய நிலைய குற்ற எண் 748/2024 என்ற வழக்கில் 9 எதிரிகள் கைது செய்து 245 கிராம் மெத்தபெட்டமைன் என்னும் போதைப் பொருளை பறிமுதல் செய்து அதன் தொடர்ச்சியாக மெத்தபெட்டமைன் தயார் செய்ய கல்லூரி மாணவர்கள் நடத்தி வந்த ஆய்வகம் கண்டறிந்து அழிக்கப்பட்டது.

கே-8 அரும்பாக்கம் காவல் நிலைய நிலைய குற்ற எண் 613/24 என்ற வழக்கில் 7 எதிரிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து 39 கிலோ கேட்டமைன், 1.3 கிலோ மெத்தபெட்டமைன், ஸிவ. 51,00,000/-, 5 நாட்டு துப்பாக்கிகள் மற்றும் 79 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டது. இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட ராஜா என்பவர் இலங்கையை சேர்ந்த சர்வதேச போதைப்பொருள் கும்பல் கஞ்சி பாணி இம்ரான் மற்றும் சின்னா ஆகியோருக்கு தொடர்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

சினிமா துறையில் போதைப்பொருட்கள் புழக்கத்தில் இருப்பதாக ஏஎன்ஐயு தனிப்படையினருக்கு கிடைத்த தகவலின் படி போதைப்பொருட்கள் விற்பனை செய்து வந்த துணைநடிகை எஸ்தர் (எ) மீனாவை டி-2 அண்ணா சாலை காவல் நிலைய குற்ற எண் 205/2024 என்ற வழக்கில் கைது செய்து அவரிடமிருந்து 5 கிராம் மெத்த பெட்டமைன் கைப்பற்றப்பட்டது. அவருடன் தொடர்பில் உள்ளவர்கள் பற்றி விசாரணை நடைபெற்று வருகிறது.

வெளிமாநிலத்தில் இருந்து கொண்டு சென்னையில் சின்தடிக் போதைப் பொருட்கள் விற்பனை செய்து வந்த சர்வதேச போதைப் பொருள் கும்பலை சேர்ந்த நைஜீரியா, கேமரூன் மற்றும் சூடான் நாட்டினை சேர்ந்த 22 வெளிநாட்டவர்களை கைது செய்து வழக்கின் புலன் விசாரணை முடியும் வரை திருச்சி சிறப்பு முகாமில் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நீதிமன்ற பிணையில் வெளியே வந்த 3 வெளிநாட் டவர்களை திருச்சி சிறப்பு முகாமில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.)

குறிப்பாக பதிவுசெய்யப்பட்ட 108 சின்தடிக் டிரக் வழக்குகளில்: 21.9 கிலோ (21,940.92 கிராம்) மெத்த பெட்டமைன், 1.06 கிலோ (1,068 கிராம்) மெத்தகுலோன், 39.01 கிலோ (39,012 கிராம்) கேட்டமைன், 213.28 கிராம் ஹெராயின், 67.14 கிராம் கொக்கைன், 156 எல்எஸ்டி ஸ்டாம்ப், 402 எம்டிஎம்ஏ மாத்திரைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டது.

மேலும் சின்தடிக் டிரக் வழக்குகளில் 90 செல்போன்கள், 12 இருசக்கர வாகனங்கள், 8 நான்கு சக்கர வாகனங்கள், ரூபாய் 51 இலட்சம் ரொக்கம், 1 மடிக்கணி மற்றும் 63.6 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு (2024) போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட 300 நபர்கள் மீது குண்டர் தடுப்பு காவல் ஆணை (குண்டாஸ்) பிறப் பிக்கப்பட்டது. நடப்பு 2025ம்ஆண்டு மார்ச் மாதம் வரை 52 நபர்கள் மீது குண்டர் தடுப்பு காவல் ஆணை (குண்டாஸ்) பிறப்பிக் கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்களின் தீவிர முயற்சியால் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு (ஏஎன்ஐயு) சென்னை பெருநகரில் போதைப்பொருள் நடமாட்டம் முற்றிலும் ஒழிப்பதற்கான தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

# அரசியல்வாதிகளை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது எனச் சொன்ன மோடியின் அரசுதான், ஆளுநர்களை வைத்து அரசியல் செய்கிறது! மிரட்டல் அரசியல் பாஜகவின் டி.என்.ஏ.வில்தான் ஊறிக் கிடக்கிறது! - உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் அறிக்கை

சென்னை 26, ஏப்ரல் 2025: “துணை வேந்தர்கள் மாநாட்டில் பங்கேற்கக்கூடாது என அரசு பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் மிரட்டப்பட்டுள்ளனர்” எனச் சொல்லியிருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள். இதற்கு முன்பு ஆளுநர் ரவி கூட்டிய துணை வேந்தர்கள் மாநாட்டில் பங்கேற்ற துணை வேந்தர்கள் இப்போது ஏன் பங்கேற்கவில்லை? இந்தக் கேள்விக்குப் பட்டம் படித்து மேதாவியாக இருக்க வேண்டியதில்லை.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2-ஆவது முறையாக நிறைவேற்றி அனுப்பப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஆளுநர் ரவி ஒப்புதல் அளிக்காததால், அரசியல் சாசனத்தின் 142-ஆவது பிரிவைப் பயன்படுத்தி உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்தது. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் ஆளுநருக்குக் காலக்கெடு நிர்ணயித்த நீதிபதிகள், ஆளுநரால் அனுப்பி வைக்கப்படும் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க குடியரசுத் தலைவருக்கும் காலக்கெடு நிர்ணயித்தனர்.

இந்தத் தீர்ப்புக்கு பிறகுதான் தமிழ்நாடு அரசோடு மல்லுக்கட்ட வேண்டும் என்ற ஆத்திரத்தில் ஆளுநர் ரவி துணை வேந்தர்கள் மாநாட்டைக் கூட்டியிருக்கிறார். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அறிந்து மாநாட்டைத் துணை வேந்தர்கள் புறக்கணித்திருக்கிறார்கள். இதற்கு எப்படி மாநில அரசு பொறுப்பாகும்?

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பும் சட்டமும் துணை வேந்தர்களுக்குத் தெரிகிறது. ஆனால், எல்லாம் தெரிந்தும் ஆளுநர்தான் வீம்புக்கு அரசியல் செய்கிறார். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு சட்டத்துக்குப் புறம்பாகத் துணை வேந்தர்கள் மாநாட்டை ஆளுநர் ரவி கூட்டியிருக்கிறார். அதில் பங்கேற்பது சட்டத்திற்கு எதிராக அமையும் எனக் கருதி, துணை வேந்தர்கள் புறக்கணித்திருக்கிறார்கள். ஆளுநர் ரவிதான் சட்டத்தை மதிக்காமல் மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்கள் என்றால், துணை வேந்தர்களும் அப்படியே நடக்க வேண்டுமா என்ன?

அண்மையில் கூட தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் பதவிக்குப் புதிய தலைவர் நியமிக்கப்பட்டார். அரசியல் செய்ய ஆசைப்பட்டால், ஆளுநர் ரவி அந்தப் பதவியில் போய் அமர்ந்திருக்கலாமே! எதற்கு ஊட்டிக்குப் போனார்?

அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமானவரித் துறை, என்.ஐ.ஏ. போன்ற அதிகார அமைப்புகளை வைத்துத்தான் ஒன்றிய அரசு எதிர்க்கட்சிகளை மிரட்டிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு எதையும் சட்ட ரீதியாகத்தான் எதிர்கொள்வோம். அப்படித்தான் மசோதாக்கள் விவகாரத்தில் வெற்றி பெற்றோம்.

ஆளுநர்கள் அந்தந்த மாநிலப் பல்கலைக் கழகங்களில் வேந்தராகச் செயல்படுவதற்கு அரசமைப்புச் சட்டத்தில் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. பல்கலைக் கழக வேந்தராக ஆளுநர்கள் இருப்பதைப் பற்றி அரசமைப்புச் சட்டத்தில் எதுவும் சொல்லவில்லை.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களை எல்லாம் பல மாதங்களாகக் கிடப்பில் போட்ட ஆளுநர் ரவிக்கு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு இந்தியா முழுவதும் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க குடியரசுத் தலைவருக்கும் 3 மாதம் காலக்கெடு நிர்ணயித்து உத்தரவிட்டிருப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாமல், குடியரசுத் துணை தலைவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு ஊட்டிக்கு வந்திருக்கிறார் ஆளுநர் ரவி.

“முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு போட்ட வழக்கு ராஜ்பவனைத் தாண்டி ராஷ்டிரபதி பவன் வரை பதம் பார்த்துவிட்டதே! என அடிவயிறு எரிந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு ஆளுநர் ரவி கிடப்பில் போட்டு வைத்த மசோதாக்களால்தான் ஆளுநருக்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அந்தத் தீர்ப்பை விமர்சிக்கிறார் குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர். இவர் மேற்கு வங்க ஆளுநராக இருந்த போது முதல்வர் மம்தா பானர்ஜி அரசுக்கு எதிராக நடத்திய அடாவடிகளை இந்த நாடு பார்த்தது. அவர் வழியொற்றி நடக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி கூட்டிய துணை வேந்தர்கள் மாநாட்டில் ஜெகதீப் தன்கர் கலந்து கொள்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

“மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான உறவை மேம்படுத்துவது குறித்து ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட நீதிபதி மதன் மோகன் பூஞ்சி கமிஷன் அறிக்கையின் படி, அரசியல்வாதிகளை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது. ஆனால், மன்மோகன் சிங் அரசோ குஜராத்தில் அரசியல்வாதிகளை மட்டுமல்ல; மாற்றுக் கருத்துகளைக் கொண்ட அரசியல்வாதிகளையும் ஆளுநராக நியமிக்கிறது” எனச் சொன்னவர் யார் தெரியுமா? குஜராத் முதல்வராக இருந்த மோடிதான்!

மோடி பிரதமர் ஆன பிறகு பா.ஜ.க.வுக்குப் பிடிக்காத, அவர்களை எதிர்க்கும் மாநில அரசுகளை ஆளுநர்கள் மூலம்தான் குடைச்சலைக் கொடுத்து கொண்டிருக்கிறார். அரசியல்வாதிகளை ஆளுநர்களாக நியமிக்கக் கூடாது எனச் சொன்ன மோடியின் அரசுதான், ஆளுநர்களை வைத்து அரசியல் செய்கிறது. பா.ஜ.க-வைச் சேர்ந்த அரசியல்வாதிகளைத் தான் ஆளுநர்களாக மோடி நியமித்தார். மகாராஷ்டிர ஆளுநர் வித்யாசாகர் ராவ் தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக இருந்தபோதுதான் சசிகலாவை முதலமைச்சர் பதவி ஏற்கவிடாமல் எடப்பாடி பழனிசாமிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பன்னீர் செல்வத்தையும் பழனிசாமியையும் ஒன்றாகக் கைகோத்து இணைத்து வைத்தார். பன்வாரிலால் புரோகித்தையும் ஆர்.என். ரவியையும் ஆளுநர்களாக நியமித்து தமிழக அரசுக்குக் குடைச்சலைக் கொடுத்தார்கள்.

மிரட்டல் அரசியல் எல்லாம் பா.ஜ.க.வின் டி.என்.ஏ-வில்தான் ஊறிக் கிடக்கிறது. மிரட்டுவது உங்கள் டி.என்.ஏ வில் இருக்கலாம்; துணிந்து மாநில உரிமைகளுக்காக எதிர்த்து நிற்பதுதான் எங்கள் டி.என்.ஏ வில் இருக்கிறது.

# தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான அண்ணா சாலையில் நான்கு வழி மேம்பால சாலை அமைத்தல் தொடர்பாக செய்யப்பட்டுள்ள போக்குவரத்து மாற்றம்.




சென்னை 26, ஏப்ரல் 2025: அண்ணா சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான நான்கு வழிசாலைக்கான மேம்பால கட்டுமான பணிகள் நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்படுவதால், மேற்படி பணி நடைபெறும் இடங்களில் 20.04.2025 முதல் 22.04.2025 வரை மூன்று நாட்களுக்கு சோதனை அடிப்படையில் போக்குவரத்து மாற்றம் செய்யபட்டிருந்தது. மேற்படி பணியானது தொடர்ந்து நடைபெற்று வருவதால், மேலும் கண்காணிப்புக்காக 04.05.2025 வுரை தற்போதுள்ள போக்குவரத்து மாற்றம் நீட்டிக்கப்படுகிறது.

போக்குவரத்து மாற்றம் :-

தேனாம்பேட்டையிலிருந்து சைதாப்பேட்டை நோக்கிச் செல்லும் அனைத்து வாகனங்களும் செனடாப் சாலை, டர்ன்புல்ஸ் சந்திப்பு வழியாக திருப்பிவிடப்பட்டு, சேமியர்ஸ் சாலையில் (பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சாலை) வலதுபுறம் திரும்பி நந்தனம் சந்திப்புக்குச் சென்று பின்னர் இடது/வலது புறம் திரும்பி அண்ணா சாலை வழியாக சென்று தங்கள் இலக்கை அடையலாம்.

சைதாப்பேட்டையிலிருந்து சேமியர்ஸ் சாலை நோக்கி வரும் அனைத்து வாகனங்களும் தடை செய்யப்படும், அதற்கு பதிலாக இவ்வாகனங்கள் அண்ணா சாலை, செனடாப் சாலை, வழியாகச் சென்று பின்னர் சேமியர்ஸ் சாலை வழியாக தங்கள் இலக்கை அடையலாம்.

ஜி.கே.எம் பாலம் செனடாப் சாலையில் இருந்து வரும் வாகனங்களுக்கு மட்டும் ஒரு வழிப்பாதையாக மாற்றப்படும், மேலும் காந்தி மண்டபம் சாலையிலிருந்து வரும் வாகனங்களுக்கு அனுமதி இல்லை. இதேபோல், ரத்னா நகர் பிரதான சாலையும் செனடாப் சாலையிலிருந்து ஒரு வழி பாதையாக இருக்கும், அண்ணா சாலையிலிருந்து செல்ல அனுமதி இல்லை, மேலும் அண்ணா சாலையில் இருந்து செனடாப் 1வது தெருவிலிருந்து செல்லும் வாகனங்களுக்கு அனுமதிக்கப்படுகிறது, ஆனால் செனடாப் 1வது பிரதான சாலையிலிருந்து செல்ல அனுமதி இல்லை.

கோட்டூர்புரத்திலிருந்து செனடாப் சாலை வழியாக தேனாம்பேட்டை நோக்கி வரும் வாகனங்கள் தடை செய்யப்படும், அதற்கு பதிலாக இவ்வாகனங்கள் இடதுபுறம் ஜி.கே.எம் பாலம் சர்வீஸ் சாலையில் சென்று டர்ன்புல்ஸ் சந்திப்பு, சேமியர்ஸ் சாலை, நந்தனம் சந்திப்பு, அண்ணா சாலை வழியாக சென்று தங்கள் இலக்கை அடையலாம். சீரான போக்குவரத்தினை உறுதி செய்வதற்காக அண்ணா சாலை, செனடாப் சாலை, சேமியர்ஸ் சாலை மற்றும் அதைச்சுற்றியுள்ள ஒருவழிப் பாதைகளில் வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை செய்யப்படும்.

பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்ளப்டுகிறார்கள்.

# தமிழகத்தில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்களை வெளியேற்ற காவல்துறை நடவடிக்கை

சென்னை, 26 ஏப்ரல் 2025: தமிழகத்தில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்களை வெளியேற்ற காவல் துறை நடவடிக்கை எடுத்து வருவதாக கூறப்படுகிறது.

காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதல் சம்பவம் நாடு முழுவதும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதைத் தொடர்ந்து தீவிரவாதிகளுக்கு தக்க பதிலடி கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக இந்தியாவில் தங்கி இருக்கும் பாகிஸ்தானியர்கள் வெளியேற வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. வருகிற 27-ந்தேதி வரை மட்டுமே பாகிஸ்தானியர்கள் வைத்துள்ள விசா செல்லு படி ஆகும் என்றும், மருத்துவ சிகிச்சைக்காக வந்திருப்பவர்கள் மட்டும் 29-ந்தேதி வரை தங்கி இருக்கலாம் என்றும் மத்திய அரசு அதிரடியாக அறிவித்துள்ளது.

இதன்படி அனைத்து மாநிலங்களிலும் தங்கி உள்ள பாகிஸ்தானியர்களை வெளியேற்று வதற்கான நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வருகிற 27-ந் தேதிக்குள் தமிழகத்தில் தங்கி உள்ள அனைத்து பாகிஸ்தானியர்களையும் வெளியேற்று வதற்கான நடவடிக்கைகள் வேகப்படுத்தப்பட்டுள்ளன. பாகிஸ்தானில் இருந்து மருத்துவ விசாவை பெற்றுக் கொண்டு சென்னையில் உள்ள 2 பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு சிகிச்சைக்காக அந்நாட்டை சேர்ந்தவர்கள் தொடர்ச்சியாகவே வந்து கொண்டிருப்பது தெரியவந்துள்ளது. இது போன்று சிகிச்சையில் இருப்பவர்கள் மட்டும் 29-ந்தேதி வரை தங்கி இருக்கலாம் என்றும் அதன் பின்னர் அவர்களும் சென்னையை விட்டு வெளி யேறிவிட வேண்டும் என்றும் போலீசார் அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

தமிழகத்தில் மட்டும் 200 பாகிஸ்தானியர்கள் தங்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இவர்களில் பெரும்பாலானவர்கள் சென்னையில் இருப்பதும் தெரியவந்து உள்ளது. அதே நேரத்தில் வேலூர் பகுதியிலும் சிலர் சிகிச்சைக்காக வந்து தங்கியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் கண்டிப்பாக வருகிற 29-ந்தேதிக்குள் வெளியேறிவிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு இருக்கிறது. இதன் பிறகும் வெளியேறாத பாகிஸ்தானியர்களை வெளியேற்ற காவல் துறையினர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது.

# முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா கணவர் மரணம்: எடப்பாடி பழனிசாமி இரங்கல்

சென்னை, 26 ஏப்ரல் 2025: அண்ணா தி.மு.க. அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.கோகுல இந்திராவின் கணவர் வழக்கறிஞர் ஏ.ஆர். சந்திரசேகர் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று இரவு மரணமடைந்தார். அவரது உடலுக்கு எடப்பாடி பழனிசாமி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.


உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 15 ந் தேதி சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் ஏ.ஆர். சந்திரசேகர் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிகிச்சை பலனின்றி நேற்று இரவு அவர் காலமானார்.

அவர் மரணமடைந்த செய்தி அறிந்ததும், உடனடியாக எடப்பாடி பழனி சாமி, மருத்துவ மனைக்கு சென்று சந்திரசேகர் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கோகுல இந்திராவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எடப்பாடி பழனிசாமி ஆறுதல் கூறினார். ஏ.ஆர். சந்திரசேகர் உடல் சொந்த ஊருக்கு கொண்டு செல்லப்பட்டது. சந்திரசேகர் மறைவுக்கு அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முயூலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

அண்ணா தி.மு.க. அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ். கோகுல இந்திராவின் கணவர் ஏ.ஆர். சந்திரசேகர் உடல்நலக் குறைவால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றேன். பாசமிகு கணவரை இழந்து மிகுந்த வேதனையில் வாடும் அன்புச் சகோதரி கோகுல இந்திராவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், இந்தத் துயரத்தைத் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தியையும், தைரியத்தையும் அளிக்க வேண்டும் என்றும், சந்திரசேகருடைய ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்,

# இந்தியா-பாகிஸ்தான் அரசுகள் அதிகபட்ச நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும் : ஐநா



சென்னை, 26 ஏப்ரல் 2025: இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது. காஷ்மீரின் பஹல்காம் மலைப் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது தீவிரவாதிகள் கடந்த 22ம் தேதி தாக்குதல் நடத்தினர். இந்த சம்பவத்தை அடுத்து இந்தியா பாகிஸ்தான் இரு தரப்பிலும் பரஸ்பரம் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் சார்பில் பேசிய ஸ்டீபன் டுஜாரிக், "அவர் (ஐ.நா. பொதுச்செயலாளர்) எந்த நேரடித் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவர் நிலைமையை மிக நெருக்கமாகவும் மிகுந்த அக்கறையுடனும் கண்காணித்து வருகிறார் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல முடியும்.

2 நாட்களுக்கு முன்பு, 22ம் தேதி ஜம்மு காஷ்மீரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு நாங்கள் மிகவும் தெளிவாகக் கண்டனம் தெரிவித்தோம். இதில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

எனினும், அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்கவும், நிலைமை மேலும் மோசமடையாமல் பார்த்துக் கொள்ளவும் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான எந்தவொரு பிரச்சினையும், அர்த்தமுள்ள, பரஸ்பர ஈடுபாட்டின் மூலம் அமைதியாக தீர்க்க முடியும் என்றும், தீர்க்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் நம்புகிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.